


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.3.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, செயலாளர் பேராசிரியர் ஆர். ராஜ்குமார் மற்றும் வணிகர் நல வாரிய நிர்வாக குழு உறுப்பினர்கள் சந்தித்து, வணிகர் நலவாரிய அலுவல்சாரா உறுப்பினர்களை மேலும் 2 ஆண்டுகள் காலம் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றனர்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (10.03.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 'தமிழரசு' மின்னிதழ் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இணையதள பயன்பாடு (Web Application) மற்றும் கைப்பேசி செயலினை (Mobile Application) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்/தமிழரசு இதழின் ஆசிரியர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் முனைவர் இரா. பாஸ்கரன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# திருச்சிமுனையில் திருப்புமுனை

மகிழ்ச்சி

உணர்ச்சி

எழுச்சி

நெகிழ்ச்சி

எல்லாமும்
ஆனது

எங்கள்
திருச்சி....

ஆம்...

கருப்பு சிவப்பு
படை

காவேரி
நதிக்
கரையை

கடற்
கரையாக
மாற்றியது..

கொள்ளிடமும்
மனிதத்
தலைகளால்

கொள்ளாத
இடமாக

சிறுகனூர்
பெருகனூர்
ஆனது ..

தேர்தலில்
பங்கேற்கும்
முடிவுக்கு

1956ல்
அண்ணாவுக்கு
வாழ்த்திசைத்து
வழி அனுப்பிய

அன்பில்
கோட்டமாம்

அதே
பொன்னி
நதிக்கரை

இன்று..
2026ல்

"மீண்டும்
ஸ்டாலின்

வேண்டும்
ஸ்டாலின்"
என்னும்



தித்திப்பு

பேரொலியை

வானிடியாய்
ஒலித்து

பத்துலட்சம்
படை
வீரர்கள் சூழ

பரணி பாடிக்
களித்தது...

கரிகால்
பெருவளத்தான்
கட்டிய
கல்லணை போல்

கம்பீரமாய்
நிலைத்து

பவள விழா
கடந்த

எழு கதிர்
இயக்கத்தின்

மூன்றாம்
தலைமுறையை

புதிய தலை
முறைகளோடு

புகழேந்திச்
செல்லும்

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலினின்

தொடர்
வெற்றித்
தோரணம்

"ஏழாம் முறை
அரியணையில்
எங்கள்
திமுக "என
பற்றிப் படர்ந்து

புனித ஜார்ஜ்
கோட்டையில்
புதுச் சரித்திரம்
படைத்திட

சோழ நாட்டு
தீரர் கோட்டம்

ஆலவட்டம்
வீசி

ஆர்ப்பரித்து
மகிழ்ந்தது..

ஆம்...

இலக்கு
இருநூறு

இசைத்தது
சிறுகனூரு



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்




சேலம் அம்மாபேட்டையில் உள்ள பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் பேராசிரியரின் 6ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பேராசிரியரின் படத்துக்கு சேலம் மத்திய மாவட்ட தி.மு.க பொருளாளர் மு. கார்த்திகேயன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மன்றத்தின் செயலாளர். கே. குமாரசாமி, தலைவர் எம்.ஞானசேகர். பொருளாளர். பொட்டு பி.சேகர். பொதுக் குழு உறுப்பினர். லோகநாதன், பேர்லன்ட்ஸ். ராஜ்குமார், தொழிலதிபர். துரைசாமி, கௌதமன். கிருஷ்ணன். ரவி, முருகன். கலைச் செல்வன் ஆகியோர் இருந்தனர்.

## தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் சென்ற ஆண்டு தேர்வான

# 100 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை - நிதியொப்பளிப்பு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

*சென்னை, மார்ச் 12-*

2024-2025-ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட 100 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு திங்கள்தோறும் உதவித்தொகை வழங்குவதற்கான நிதியொப்பளிப்பு அரசாணை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களால் (10.03.2026 செவ்வாய்க்கிழமை) அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழக அரங்கில் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகச் சீரிளமைத் திறம் கொண்ட அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதுகாறும் 1534 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2025-26ஆம் நிதியாண்டு முதல் பயனாளிகளின் எண்ணிக்கை 100 லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது இத்திட்டதிற்கென ஆண்டிற்கு ரூ.6,98,08,000/- தொடர் செலவினமாக அரசு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதுமைக்காலத்திலும் பொருள் வறுமை, தமிழ்த் தொண்டர் பெருமக்களைத் தாக்காவண்ணம் திங்கள்தோறும் உதவித் தொகை ரூ.7500/-ம், மருத்துவப்படி ரூ.500/-ம் என மொத்தம் எட்டாயிரம் ரூபாய் வழங்கப்பெறுகிறது. தமிழுக்காகத் தம் வாழ்நாளை ஈந்துவரும் பெருமக்களுக்கு இந்த உதவித்தொகை அவர்கள் வாழுங்காலமெல்லாம் தமிழ்த் திருப்பணியில் தொய்வின்றி ஈடுபடும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது. தகைமைமேல் தகைமையாக, அகவை முதிர்ந்த தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது. தமிழ் காத்த தகைமைக்காக உதவித்தொகை பெற்ற தமிழறிஞர் பெருமக்களின் மறைவுக்குப் பின்னர், அவரின் வாழ்விணையர் / திருமணமாகாத மகள் / கைம்பெண் மகளுக்கு, அவர்தம் வாழ்நாள் முழுவதும் ரூ.2500/- மற்றும் மருத்துவப் படி ரூ.500/- என அத்திருத்தொண்டு தொடர்கிறது.

அதன்படி 2024--2025ஆம் நிதியாண்டிற்கு சென்னை மாவட்டத்தில் 9 பேருக்கும், திருவள்ளூர் மாவட்டத்தில் 5 பேருக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5 பேருக்கும், வேலூர் மாவட்டத்தில் 3 பேருக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 7 பேருக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் 2 பேருக்கும், பெரம்பலூர் மாவட்டத்தில் ஒருவருக்கும், அரியலூர் மாவட்டத்தில் ஒருவருக்கும், தருமபுரி மாவட்டத்தில் 3 பேருக்கும், நாமக்கல் மாவட்டத்தில் 2 பேருக்கும், ஈரோடு மாவட்டத்தில் ஒருவருக்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3 பேருக்கும், திருப்பூர் மாவட்டத்தில் 2 பேருக்கும், நீலகிரி மாவட்டத்தில் 6 பேருக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 4 பேருக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 பேருக்கும், சிவகங்கை மாவட்டத்தில் 2 பேருக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 பேருக்கும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 பேருக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருவருக்கும், மதுரை மாவட்டத்தில் 3 பேருக்கும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒருவருக்கும், தேனி மாவட்டத்தில் 4 பேருக்கும், விருதுநகர் மாவட்டத்தில் 2 பேருக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் 2 பேருக்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஒருவருக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 பேருக்கும், திருப்பத்தூர் மாவட்டத்தில் 2 பேருக்கும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 பேருக்கும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 2 பேருக்கும், தென்காசி மாவட்டத்தில் ஒருவருக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 3 பேருக்கும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 2 பேருக்கும் என மொத்தம் 34 மாவட்டங்களிலும் 100 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் நேற்று (10.03.2026 செவ்வாய்க்கிழமை) சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழக அரங்கில் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ்

# மருத்துவ - பல் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை!

*சென்னை, மார்ச் 12-*

தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளின் விளைவாக, மாநிலத்தின் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் அதிகளவில் பதக்கங்களை வென்று குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் திறமையான விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து அவர்களின் உயர்கல்வி முன்னேற்றத்தை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கிறது. அவற்றில் முக்கியமான ஒன்றாக, கல்லூரிகளில்விளையாட்டு ஒதுக்கீட்டின் (Sports Quota) கீழ் இடஒதுக்கீடு வழங்கும் திட்டம் அமைகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், 1994-1995 கல்வியாண்டில், தமிழ்நாடு அரசின் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் MBBS மற்றும் BDS பாடப்பிரிவுகளில் சேர்க்கைக்காக விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் முதற்கட்டமாக 3 இடங்கள்வழங்கப்பட்டன. இதன் முக்கிய நோக்கம், திறமையான விளையாட்டு வீரர்கள் மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து பயிலும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதாகும்.

பின்னர், மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையும், மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் அதிகரித்ததை கருத்தில் கொண்டு, 01.06.2018 அன்று வெளியிடப்பட்ட அரசாணைநிலை எண்.376, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை (MCA-1) ஆணையின்படி, விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 3 இலிருந்து 8 ஆக உயர்த்தப்பட்டது. அதில் MBBS பாடப்பிரிவிற்கு 7 இடங்களும், BDS பாடப்பிரிவிற்கு 1 இடமும் ஒதுக்கப்பட்டு, 2018-2019 கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளின் விளைவாக, மாநிலத்தின் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் அதிகளவில் பதக்கங்களை வென்று குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்து வருகின்றனர்.

விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கையை உயர்த்தி வழங்கிட வேண்டுமென விளையாட்டு வீரர்கள் கோரிக்கை வைத்தனர்.

இதனை தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 47வது செயற்குழு கூட்டத்தில், விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் கல்லூரி சேர்க்கைக்கான இடங்களை அதிகரிப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அதில், விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் கல்லூரி சேர்க்கைக்கான இடங்களை உடனடியாக அதிகரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டதுடன், இதற்கான முன்மொழிவை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பவும் தீர்மானிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, தற்போது அரசாணை நிலை எண்.92, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் (MCA-1) துறை, நாள்.10.03.2026-ன்படி தமிழ்நாடு அரசு,அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் MBBS படிப்புக்கானஇடங்கள் 7-லிருந்து 13 ஆகவும்BDS படிப்புக்கான இடங்கள் 1-லிருந்து 2-ஆகவும் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் இடங்களை அதிகரித்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.




நாமக்கல் மேற்கு மாவட்டம் மோகனூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு செங்கப்பள்ளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி சிவா சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, மோகனூர் மேற்கு. ஒன்றிய செயலாளர் ஏ.பி.ஆர். சண்முகம் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.